
உ

கடவுள் துணை.

மதுரை

# சொக்கலிங்கப்பதிகம்.



மதருஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதருஸ் என். சி.

1914.

# விளம்பரம்.

**இதனால்** சகலருக்கும் அறிவிப்பது, சென்னை, சூளை, போஸ்டைச்சேர்ந்த காளத்தியப்பமுதலி வீதி, 17-18வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோல்டன் அச்சுயந்திரசாலையில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஸ்கூல்புத்தகங்களும், அநேகவித மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைகளும், அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ்டியார்டு அளவுள்ள விநோதமாகிய பொட்டகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணா லேபில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

தேவையானவர்கள் அடியிற்கண்டிருக்கும் கம்பெனியாரவர்களுக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

**டி, கோபால் அண்டு கோ.**

**கோல்டன் பிரஸ், சூளை போஸ்டு, மதராஸ்.**

உ

கடவுள் துணை.

# மதுரை

# சொக்கலிங்கப்பதிகம்.

மூவர்சீர்முதலே மூலமாகியதோர் மூர்த்தியேமுக்கணனவனே, முதுமறைப் பொருளே பரமரகசியனே முயல்மெரித்தாடியசிவனே, தேவருமயன்மால் தேடியுங்காணுச் சிவசிவ தேவனுய்நின்று, திருச்சடைமீதில் கங்கையைத்தரித்து திரிபிறை தன்னையே முடித்து, அஞ்சலென்றடியார்க்கன்புடன்காட்சி அளித்திடும் ஆனந்தபரனே, அரகரசிவனே ஆனந்தக்கடலே ஆடிடும்பாதமேயருள்வாய், இன்சொலாகியதோர் இசைந்தபார்வதியும் ரிஷபவாகனனுமாய்வருவாய், சொக்கலிங்கேசா என்கருத்தினிலிருக்கும் ஈசனே மாசிலாமணியே. (க)

ஆலகாலம்போல்சீறி வருகிறவிஷத்தை அள்ளியேவுண்டிடும் பரனே, ஐயனே கண்டங் கறுப்பதானவனே அம்பலத்தாடிய சிவனே, காலகாலனையும் காய்ந்துதைத்

தருளி கடுந்தழல் மேனியானவனே, கச்சிமான்காணு வடிவுகொண்டெழுந்தவள்ளலே அருணைமாநகரில், மலையதாயோங்கிவல்வினைதீர்த்து மானிடக் காட்சியேகொடுப்பாய், வஞ்சனைபில்லிசூனியமுதலும் மாய்த்திடும்மூலநாயகனே, ஏலவார்க்குழலி இசைந்தபார்வதியும் ரிஷபவாகனனுமாய்வருவாய், சொக்கலிங்கேசாயென் கருத்தினிலிருககும் ஈசனே மாசிலாமணியே. (௨)

அஞ்செழுத்ததனி லமர்ந்திடும்பரனே ஐயனேகடவுளாகியதோர், அப்பனே புலியூரமர்ந்தநாயகனே ஆதியே சோதிமாமணியே, மஞ்சனீராடி கரியுரித்தாடை வகையுடனணிந்து மேலிடத்து, மாதுபார்வதியைசேரவேபாகம்வைத்திடும்வள்ளல்நாயகனே, கொஞ்சியசபையில் நடனமேபுரியுங் கோமளக் குஞ்சி செஞ்சடையும், கொன்றைமா மலருங் கொன்றையுந் தும்பை கொழிந்திடு வில்வமேயணிந்து, இன்சொலாகியதோர் யிசைந்தபார்வதியும் ரிஷபவாகனனுமாய் வருவாய், சொக்கலிங்கேசாயென் கருத்தினி லிருக்கும் ஈசனே மாசிலாமணியே. (௩)

முப்புராதிகளை பரப்பமாய்நகைத்த மூர்த்தியே முக்கணனவனே, முன்கையில் சூலமான்மழுதரித்து முடி

யில் வெள்ளருகுமையணிந்து, அப்பர் சுந்தரர்க் காகியே யிசைய ஐயனே வாதவூரானே, அப்பர்மாணிக்கர்க்கா கியேநரியை அரும்பரியாக்கியசிவனே, செப்பமாய்வேட னெச்சிலுண்டவனே தென்கயிலைவாழ்கின்றஈசா, சேட ஞபரண மணிந்தநற்பரனே சிலைநுதல்மான்மழுதரித்து, இப்பொழு துமையாள் ஈஸ்வரியுடனே ரிஷபவாகனனு மாய்வருவாய், சொக்கலிங்கேசாயென் கருத்தினி லிருக் கும் ஈசனே மாசிலாமணியே. (௪)

தக்கன்யாகத்தை யழித்திடும்வீரன் தன்னையும்வே ர்வையாலளித்த, தக்கன்மாமதனே விழியினு லெரித்த சம்புவே சதாசிவப் பொருளே, அக்கணத்தயன்மா லடி பணிந்தனது அம்பிகை யாளினுஞ் சேர, அகன்றிடும் மலையரையன் மகளைநீர் புணர்ந்து அறுமுகன் றன்னையே யளித்த, சொக்க நாயகனே மதுரைமாங்கிரியிற் சோதி யாமாதியாம் பரனே, சொர்னமாம் சுரூபவண்ணனே கண்ணுய் செம்புகா அம்புலிதரித்து, இக்கணத்துமை யாள் ஈஸ்வரியுடனே ரிஷபவாகனனுமாய்வருவாய் சொ க்கலிங்கேசாயென் கருத்தினிலிருக்கும் ஈசனே மாசிலா மணியே. (ரு)

கஞ்சுளிதரித்து காவியுமணிந்து கையினிற் கபால முமேந்தி, கரியுரித்தாடை வேங்கை யாசனமுங் கழுத் தினி லுத்திராக்ஷமுமணிந்து, செஞ்சடைமீதில் கங்கை

யைத் தரித்து திங்களை தன்னையேமுடித்து, சிவந்தணல் முகத்தில் விபூதியுமணிந்து சேடனாபரணமேபூண்டு, அஞ்சலென்றடியார்க் கன்புடன்காட்சியளித்திடும் பாதபங்கயனே, அரகரசிவனே ஆனந்தக்கடலே ஆடிடும்பாதமேயருள்வாய், இன்சொலாகியதோர் யிசைந்த பார்வதியும் ரிடபவாகனனுமாய் வருவாய், சொக்கலிங்கேசாயென் கருத்தினிலிருக்கும் ஈசனே மாசிலாமணியே. ௬)

அத்தனே அரசனே ஆலங்காட்டானே அண்ணலே காளியோடாடும், அருமறைப் பொருளே ஆனந்த அரனே ஐயனே கடுந்தழலொளியே, சித்தனே சிவனே சிவகுலக்கொழுந்தே சிறுபுலித்தோலுடையுடுத்தி, சிறுபிள்ளை கரியம் தலையறிந்துண்டு சிறுவனுககு காட்சியே கொடுத்து, முத்தனேமுதல்வா முக்கணுமுனியே மூஷிகன்தன்னையேயளித்தமூர்த்தியேயெனதுபாவமேயகற்றி முன்வந்து என்னையாண்டருள்வாய், எத்தனேதேவர்சூழவேயிடத்தில்ஈஸ்பரியாளுடன்வருவாய், சொக்கலிங்கேசாயென் கருத்தினிலிருக்கும் ஈசனே மாசிலாமணியே.

கயிலையங்கிரியில் கொடிமுடிபதினாயிரம் படைத்த கண்ணனேக்டவுளேயெவரும், காணொணாவடிவே கனகமாங்கிரியினி லமர்ந்த, நயனமுன்னடியார் நற்பதப்பொருளே நான்முகன்சென்னியேகிளைந்து, கையினிற் கபா

லங்கொண் டிரந்துண்ட கண்ணனே கடுந்தழலொளியே கயவர்களிருளை கட்டறுத்தாண்ட கச்சிவா ழேகம்பநாதா, கம்பையாற்றருகிலின்பமாயுரைக்கு காட்சியேகொடுத்திடும்பரனே, இன்பமாயிங்கு பிசைந்த பார்வதியும் ரிடபவாகனனுமாய் வருவாய், சொக்கலிங்கேசாயென் கருத்தினிலிருக்கும் ஈசனே மாசிலாமணியே. (அ)

மாதுபங்காளா மாலயன் சூழவந்தெனக்காட்சியே கொடுப்பாய், மண்டலத்துனதுபாதமேயல்லாமல்மற்றெனக்காதரவறியேன், தாதுலாதுனதுயூகபூடணனேதண்மையாய் மாய்க்கவு மறியேன், உகந்துடன் பஞ்சாட்சரத்தை நெஞ்சினிலுறுதியாய் துதிக்கவுமறியேன்,தீதுசெய்தடியேன் திலங்கவேதனையில் சிக்கியேமனந்தளர்ந்துழன்றேன், தீவினையகற்றியுன் திருவடிதன்னில் சேர்க்குநாளெந்தநாளுளதோ, ஏதேனுமறியா ரடியன்முன்னிங்கு ரிடப வாகனனுமாய் வருவாய், சொக்கலிங்கேசாயென் கருத்தினிலிருக்கும் ஈசனே மாசிலாமணியே. (கூ)

செய்வதுங் கொலையே செப்புவதும் பொய்யே செகத்தினில் நடப்பதுமகந்தை, ஜெகத்து மானிடர்கள் கள்ளனென்றிடவே ஜெனனமே யிவ்வுலகெடுத்துன், அய்வதாகியபின் அறிவுவந்ததினு லவுதியே அனுபவித்தலைந்தேன், அமையுமிவ்வளவு அடியெனக்குனது அம்புய

பாதமே யருள்வாய், தையல்நாயகியைத் தரித்திடும்பர காசரசமா யமர்ந்திடும்பரனே, தங்கமேனியனே சம்பு சங்கரனே தயாளனே மெய்யுமேல்மதனே, யெரித்தநேத் திரமு மிங்கெனையாள ரிடபவாகனனுமாய் வருவாய், சொக்கலிங்கேசாவென் கருத்தினிலிருக்கும் ஈசனே மா சிலாமணியே. (ഥ)

அண்டர்களமரர்கள் துதித்திடும் லிங்கம் அரியய ன்போற்றிடும்லிங்கம், அகத்தியர்பூசைபுரிந்திடும்லிங்கம் அடியவர்க்கெளிதான லிங்கம் திண்டிசையோர்கள் புகழ் ந்திடும்லிங்கம், சித்தவித்தியாதரர்தொழுதிடுலிங்கம், தச ரதமகனுர் பூசைபுரிந்திடுலிங்கம் சிவசிவாராமலிங்கம், உ ண்டனையவர்க்குமொருதுணைலிங்கம் மூர்த்தியாய்போற் றிடுலிங்கம், முத்தமகாசிவிஸ்வநாதலிங்கம் உம்பர்க்குக ந்ததேராமலிங்கம், எண்டிசையதிர யிலசந்தபார்வதியும் ரிடபவாகனனுமாய் வருவாய்சொக்கலிங்கேசாவென்கரு த்தினிலிருக்கும் ஈசனே மாசிலாமணியே. (கக)

சொக்கலிங்கப்பதிகம்

முற்றிற்று.